செய்தி வெளியீடு எண்: 863 நாள்: 28.06.2024

# செய்தி வெளியீடு

மனிதகுல வாழ்விற்கு, நீரும் இயற்கையும் அடிப்படை தேவையாக கருதப்படுவதால், இந்த அரசு நீரினுடைய முக்கியத்துவத்தை கருதியும், நீர்வளங்களை பாதுகாக்க வேண்டியும் தனித்துறையாக இயங்க 2021–ஆம் ஆண்டு ஆணை வழங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் நெடிய அனுபவம் மற்றும் வழிகாட்டுதல்களின் படி நீர்வளத்துறை மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், இத்துறையானது நீர்நிலைகளை பாதுகாக்கவும், நிலத்தடி நீரை மேம்படுத்தவும், நீரினை மறுசுழற்சி செய்து உபயோகப்படுத்தவும், நீரின் தரத்தை மேம்படுத்தவும், நீர் மாசுபடுதலை தடுக்கவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேற்கண்ட பணிகளை திறம்பட செயல்படுத்துவதற்கு பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் ஆகியோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி நீர்நிலைகள் தங்களுடைய உடைமைகள் என்ற உணர்வை ஏற்படுத்தவும், இந்த புதிய இலச்சினை (Logo) உருவாக்கி மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களால் இன்று (28.06.2024) நீர்வளத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். சந்தீப் சக்சேனா அவர்களின் முன்னிலையில் வெளியிடப்பட்டது. அரசு சிறப்புச் செயலாளர், பொறியாளர். க. முருகன், முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, பொறியாளர். கு. அசோகன், திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர், பொறியாளர் எம். சுப்ரமணியன் மற்றும் இணைத் தலைமைப் பொறியாளர் (பொது), பொறியாளர் சி. பொதுபணி திலகம் அவர்களும் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu